
# தேட்டம்

சுவர் சஞ்சிகை - 2003-2004



முத்தமிழ் கலா மன்றம்
அரசினர் ஆசிரியர் கலாசாலை
கொட்டகலை.





# தேட்டம்

சுவர் சஞ்சிகை

## 2003 - 2004

வெளியீடு:
**முத்தமிழ் கலா மன்றம்**
அரசினர் ஆசிரியர் கலாசாலை
கொட்டகலை.

# நூலைப் பற்றி ..................

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தேட்டம் |
| திரட்டு | : | மூன்று |
| உரிமை | : | முத்தமிழ் கலா மன்றம் |
| பக்கங்கள் | : | 60 |
| அச்சிடப்பட்ட நூலின் தொகை | : | 175 |
| விடயம் | : | கவிதை, ஓவியம். |
| வெளியீடு | : | முத்தமிழ் கலா மன்றம்<br>அரசினர் ஆசிரியர் கலாசாலை<br>கொட்டகலை. |
| காகிதத்தாளின் அளவு | : | 16.5 - 22.5 mm |
| காகிதத்தாளின் தன்மை | : | 70கி பேங் |
| அட்டைப்படம்<br>முன்னட்டைப் படம் | : | திரு. கே. நிமலதாஷன். |
| பின்னட்டைப் படம் | : | செல்வி கே.வனஜா. |
| கணனி வடிவமைப்பும்,<br>அச்சுப்பதிப்பும் | : | நியூ ஹில்பிரைன் ஓப்செட்<br>132, திம்புள்ள வீதி,<br>மல்லியப்பு,<br>ஹட்டன். |

# சமர்ப்பணம்



இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர்
சங்கத்தை ஆரம்பித்த மலையக மூத்த எழுத்தாளர்
**திரு. கே. கணேஸ்**
அவர்களுக்கு இந்நூல்
**சமர்ப்பணம்.**

# முதல்வரின் வாழ்த்துச் செய்தி



மலையக மாதாவின் மணிமுடியாய் விளங்கும் கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையிலே ஆண்டுதோறும் மலரும் நூல்களுள் முத்தமிழ் கலா மன்றத்தினரால் வெளியிடும் "தேட்டம்" என்கின்ற நூல் இவ்வருடமும் முகையவிழ்த்து மலர்வது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கலாசாலை மாணவர்களின் சிந்தை செதுக்கிய கவிதைகள், ஓவியங்கள் என்பவற்றை சுமந்து வரும் இலக்கியச் சொத்தாகிய தேட்டம் நூல் இவ்வாண்டு போல இனிவரும் ஆண்டுகளிலும் தடையின்றி மலர்ந்து சிரிக்க என் வாழ்த்துக்கள்.

அத்துடன் இம்முயற்சிக்கு தளராது உழைத்த பொறுப்பு விரிவுரையாளர் திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி அவர்களுக்கும் முத்தமிழ் மன்ற தலைவர் செயலாளருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் என் வாழ்த்துக்கள்.

கல்லூரி முதல்வர் திரு. S. ஜெயகுமார்.
அரசினர் ஆசிரியர் கலாசாலை கொட்டகலை.

# உப முதல்வரின் ஆசிச்செய்தி



மாறிலா இளமையும், வீறு கொள் திறனும் கொண்டவள் எமது தமிழ் அன்னை. அத்தகைய தேனினும் இனிய மூவேந்தர் கட்டிக்காத்த முத்தமிழுக்கு முடி சூட்டும் முயற்சியாக எமது கல்லூரி மாணவர்கள் முத்தமிழ் விழா எடுப்பதுடன் " தேட்டம்" சஞ்சிகையையும் வெளியிடுவது கண்டு பெரு மகிழ்வெய்துகிறேன்.

இலை மறைகாய்போல் இருக்கும் கலையுணர்வுகளை கலைத்தாகத்தை வெளிக்கொணறும் எம் செல்வங்களின் படைப்புக்கள் கவிதைகளாகவும், ஓவியங்களாகவும் இந்நூலில் மிளிர்கின்றன.

எண்ணங்களை வெளிப்படுத்துவதில் சந்தம் மிகு கவிதைகளும் கருத்து வெளிப்படும் ஓவியங்களும் தனிச்சிறப்புப் பெற்றவை. அவ்வகையில் எமது கலாசாலையில் வெளிவரும் ஏனைய நூல்களில் இருந்து வேறுபட்டு தேட்டமானது கவிதைகளையும் ஓவியங்களையும் மட்டுமே சுமந்து வருகிறது.

இவர்கள் அள்ளி வீசும் தமிழின் சுகந்தங்களில் "குற்றங் காண்பதிலும், குணம் காண்பதே நன்று" என்ற வாய்மொழிக்கிணங்க அவர்கள் நிறைகளை பாராட்டி குறைகளை எடுத்துக்கூறி திருத்துங்கள் என வாசகர்களை கேட்பதோடு நூலாக்க முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட அனைவருக்கும் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு S. இதயராஜா
உப முதல்வர்
அரசினர் ஆசிரியர் கலாசாலை

# பொறுப்பு விரிவுரையாளர் எண்ணத்தில்....



இவ்வருடமும் மிகுந்த இடர்பாடுகளுக்கு மத்தியில் "தேட்டம்" முகிழ்ந்திருப்பதை எண்ணி மிகுந்த சந்தோஷம் அடைகின்றேன்.

இந்நூலில் கவிதை, ஓவியம் என்பன மிகுந்த சிறப்புடன் அமைந்து இந்நூலின் தரத்தை மேம்படுத்தியுள்ளன. எம்மால் முடிந்தவரை கவிதை, ஓவியம் போன்றவைகளை திரட்டி தேட்டம் நூலை முழுமைப்படுத்தியுள்ளோம்.

ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் குரலாக இந்தப் படைப்புக்கள் மிளிர்கின்றன. இவ்வருடமும் எமது கல்லூரியில் கணிசமான ஆசிரிய மாணவர்கள் வடக்கு-கிழக்கை பிறப்பிடமாக கொண்ட பயிலுனர்கள் அந்த மண்ணுக்கே உரித்தான கருக்கொண்ட காலத்துக்கேற்ற கவிதைகள் இங்கு தேட்டத்தினை அலங்கரிக்கின்றன. விடுதலை வேகத்தைக் கொண்ட நிறைய வேட்கை படைப்புக்கள் தேட்டத்தில் இடம்பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்கு உதவியாக என்னோடு கூடயிருந்த முதல்வர், பிரதி முதல்வர், உப முதல்வர், விரிவுரையாளர்கள், முத்தமிழ் கலா மன்ற தலைவர் திரு K. நிமலதாஷன், செயலாளர் செல்வி. S. கல்யாணி, பொருளாளர் திரு.N. லிங்கேஸ்வரன் மற்றும் முத்தமிழ் கலாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுதல்களும் உரியன. இதுபோல் இன்னும் படைப்புக்கள் வெளிவர வேண்டும் என அவா கொள்கின்றேன்.

பயிற்சி நிறைவின் பின் இன்னும் இவர்கள் பல்வேறு இலக்கிய முயற்சிகளில் தடம் பதித்து வெல்ல வாழ்த்துகின்றேன்.

**திருமதி சந்திரலேகா கிங்ஸ்லி**
பொறுப்பு விரிவுரையாளர்
முத்தமிழ் கலாமன்றம்.

# மாணவர் பேரவைத் தலைவர் உள்ளத்திலிருந்து



கல்வியின் நோக்கு சமுதாய நோக்கு சமுதாயம் மேம் படைதல் நாட்டுக்கு நலம்தரும். சமுதாய மேம்பாடு நல்லொழுக்கம், ஆளமை தூரநோக்கு, நற்சிந்தனை, வெளிப்பாடு கலைத்திறன் உள்ள தனிமனிதர்கள் சேர்ந்த தொகுதியின் சங்கமம் தனிமனிதர்களின் உள்ளார்ந்த திறன், வெளிப்பாடு மற்றையோர்களை விழிப்படையச் செய்யும். அதனால் சமூகம் விழித்தெழும்பும்.

சமூகத்தைத் தட்டியெழுப்பும் முயற்சிகளில் பேனாவின் பங்கு அளப்பரியது. பேனாவில் ஊற்றெடுக்கும் நீர் பெருநீராகி பேராறாக பெருக்கெடுத்து மனித மனங்களைக் கழுவி தூய்மையடையச் செய்கின்றது. ஆற்றொழுக்கு ஒத்த அறிஞர் கருத்துக்கள் எழுத்துருவில் வந்து அழியாத ஆவணங்களாக நிலைத்து நெடுநாள் சமூகப்பணிசெய்யும்.

அந்த வகையில் எமது கலாசாலையால் வெளியிடப்படும் சஞ்சிகைகளில் "தேட்டம்" எனும் சஞ்சிகையானது இவ்வருடமும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இவற்றிற்கு பெரிதும் ஒத்துழைப்பு வழங்கிய பொறுப்பு விரிவுரையாளர் திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி மற்றும் முத்தமிழ் கலாமன்றத்திற்கும் மனமார்ந்த பராட்டுக்களை தெரிவிப்பதோடு. வாழ்த்துக்களையும் தெரிவிப்பதால் உவகையடைகின்றேன்.

**எஸ். சுதாகரன்**
தலைவர்
மாணவர் பேரவை.

# முத்தமிழ் கலா மன்ற தலைவரின் மனக்கதவு திறந்தபோது....



தென்பொதிகையில் பிறந்து குறுமுனியாம் அகத்தியன் கைகளிலே தவழ்ந்து வளர்ந்த தமிழன்னைக்கு முத்தமிழ் கலா மன்றம் வருடா வருடம் முத்தமிழ் விழா எடுக்கும். இம்முறையும் இயல், இசை நாடகத்தமிழால் தமிழன்னையை துதிக்க மனங்கொண்டுள்ளது எம்மன்றம்.

முத்தமிழ் விழாவினை சிறப்பாக செய்வதோடு மன்றத்தின் வெளியீடான "தேட்டம்" சுவர்ச் சஞ்சிகையின் மூன்றாவது இதழை இவ்வருடம் வெளியிட சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு அகமகிழ்ந்து துதிக்கின்றேன்.

விவேகம், விடுதலை, சமூக அவலங்கள் என்பவற்றை கருவாக கொண்ட வீரமிகு கவிதைகளையும் அவற்றைச் சித்தரிக்கும் ஓவியங்களையும் சுமந்து இம்மூன்றாவது இதழ் மலர்ந்துள்ளது.

இந்நூல் வளம் பெற ஆலோசனையும் உதவியும் வழங்கிய முதல்வர், பிரதி முதல்வர், உப முதல்வர், மன்ற பொறுப்பு விரிவுரையாளர், மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களிலும் இந்நூல் மேலும் சிறப்புடன் வெளிவர உளம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு K. நிமலதாசன்
தலைவர்
முத்தமிழ் கலாமன்றம்

# பொருளாளரின் எண்ணத்தில் உதித்தவை....



காலத்தின் கண்ணாடிகளாக விளங்குகின்ற இலக்கியங்கள் கால நீரோட்டத்திற்கேற்ப பல வடிவம் எடுத்து பரிணாம வளர்ச்சியை எய்திக்கொண்டிருக்கின்றது. இதன் ஓர் அங்கமாகத்தான் எமது கல்லூரியால் வெளிவந்து புதுமணம் பரப்புகின்ற "தேட்டம்" சுவர்ச் சஞ்சிகையாகும்.

நிலைமாறும் இவ்வவனியிலே யதார்த்த உணர்வுகளை கருவாக கொண்டு எமது கல்லூரியின் ஆசிரியர் இளம் கவிஞர்களால் ஓவியர்களால் படைக்கப்பட்ட படைப்புகளின் தொகுப்பாகவே இந்த மூன்றாவது தேட்டம் சுவர்ச் சஞ்சிகை மலர்கின்றது.


இந்த இளம் கவிஞர்களின் கவிச்சாயலும் சித்திர வடிவமைப்புகளும் தற்காலத்தில் விடுதலையையும் சமாதானத்தையும் வேண்டி நிற்கும் மக்கள் சுமை நீங்கி விழிப்புப்பெறும் முனைப்புடனே அமையப்பெற்றது. அவர்களின் படைப்புக்களுடன் இச்சஞ்சிகை வெளிவருவதை இட்டு பெரும் மகிழ்வெய்துவதோடு இந்நூல் வெளிவர சகல விதத்திலும் ஒத்துழைத்தவர்களுக்கும் எனது நன்றிகளையும் உரித்தாக்குகின்றேன்.

**திரு. N. லிங்கேஸ்வரன்**
பொருளாளர்
முத்தமிழ் கலா மன்றம்.

# வாழ்க்கை

தீயன முளைவிடும்
முளையிடும்,
சாக்கடைக் குட்டைகளாய்
சுயமிழந்து;
துர்வாடை வீசுவது
வாழ்கையல்ல.

பாய்ந்தோடி முட்டிமோதி
வலிமை பெறும்வரை
'தேங்கிநின்று'
வீறுடன் உடைப்பெடுத்து
சீறிப்பாய்ந்து,
பௌதீக இயல்பின்
செயற்கைத் தடைகளை
வேரடி மண்ணுடன் பெயர்த்து,
இயல்பு நிலைமைக்கேற்ப
சலசலத்தோடும்
நதியின் நகர்வுதான்
வாழ்க்கை.



- இதயராசன் -

# அது வரை....................

நினை! நினைத்துக்கொண்டியிரு
நீண்ட இருண்ட ராத்திரிகளாய்
நிர்மூலமான நாட்களாய்
நீண்டேபோன கறுப்பு ஜுலைகள்
மீண்டும் மீண்டும்
காலடியில் இடருவதை..........

பார்! பார்த்துக்கொண்டேயிரு
பரிதவிக்க பரிதவிக்க
கொன்று குவித்த மனிதர்களின்
கொடூரப் படுகொலைகளை
நினைத்துப் பார்
மீண்டும் மீண்டும் நினைத்துப்பார்.

தேடு! தேடிக் கொண்டேயிரு
திசைமாறி திசைமாறி
திக்குத் தெரியாமல்
காணமல்போன
தென்பகுதி - என்பகுதி
உன்பகுதி தோழர்களை!

சொல்! சொல்லிக்கொண்டேயிரு
சொந்தப் பூமியின்
சுகங்களை மறுத்த மனங்களுக்கு
செவிப்பறை கிழிய உரத்து
இந்தப் பூமி "எல்லாருக்குமென"
சொல் சொல்லிக்கொண்டேயிரு

எழுது! எழுதிக்கொண்டேயிரு
மகத்துவமான மானுடன்
ஒடுக்கப்பட்டு,
ஓட ஓட துரத்தப் பட்டு
சின்னஞ் சிறியனாய் அடக்கப்பட்ட
அனைத்தும் விடுதலை பெறமட்டும்
நீ................

பாடு! பாடிக்கொண்டேயிரு
இதயமில்லாமல் ஊனப்பட்டுப் போன
மரக்கட்டைகள்
மீண்டும் எழும்பி மானுட வாழ்வை
தேடுமவரை.................... பாடு......

நட! நடந்து கொண்டேயிரு
வீறுடன் நட
வியர்வை சொட்டக் சொட்ட நட
இரத்தம் சூடேற சூடேற நட
இந்தப் பூமியின் இரத்தக் கறைகள்
மாறும் வரை.............
போரக்களப் பறைகள் ஓயும் வரை
மானுட நேயமற்ற மனங்கள்
சாகும்வரை
நட நடந்து கொண்டேயிரு.

சந்திரலேகா கிங்ஸ்லி
விரிவுரையாளர்

# புத்துலகு

எத்துணை பெரிது எத்துணை மகிமை
அத்தனை சிறப்புறு உலகம்
நித்தமும் வாழும் வளருமென்றுழைக்கும்
நிலையில்லா மாந்தரின் மனத்தே
சத்தியம் அன்பு சமத்துவம் விளங்கும்
சாந்தி நீள் அமைதியை நோக்கும்
புத்துலகமைக்கும் பொன் மனச்சிந்தை
புலர்ந்தது மலர்ந்தது அறிவு

தத்துவம் காந்தி புத்தரும் யேசு
தந்த மெய் வார்த்தைகள் மறந்து
வித்துவம் ஓங்க வென்றதோ கொடுமை
விளைந்ததோ கலகமும் போரும்
பித்தரும் மாயை பேசிடும் பதரும்
பெரியராய் ஆட்சிசெய்கின்றார்
இத்தரை மாற்றி இனியதோர் உலகம்
இயற்றிட வேண்டும் இப்போதே

வீட்டினில் அமைதி விளைந்திடும் குடும்பம்
விளங்கிடும் தெருவெலாம் நல்லோர்
நாட்டினில் சுபீட்சம் நன்மைகள் பெருக்கும்
நலம் தரு ஆட்சி செய் கூட்டம்
ஏட்டிலும் பள்ளி இயங்கிடும் கல்வி
எதிலுமோ உயர்வுறு செய்கை
ஓட்டுவோம் பஞ்சம் உழைப்பிலோ உறுதி
ஒன்றியே புத்துலகு அமைப்போம்.

திருமதி S.K ஆறுமுகம்
விரிவுரையாளர்

# சுமை

வந்த ஷெல்லும்
போட்ட குண்டும்
கேட்ட புலம்பலையும் - தன்
வயிற்றில் சுமந்து
செந்நீரில் நனைந்து
சுமக்கின்றான் சுமையாக
தாயக அன்னையவள்

தாயக கனவுடன்
தயங்காது போராடி - இறுதி
மூச்சையும் தாயகத்துக்காக
ஈர்ந்துவிட்ட
மாவீரர் கல்லறைகளை
சுகமான சுமையாக
சுமந்து நிற்கின்றான் - எம்
தாயகத்தின் தாயவள்

பத்து மாதம் பக்குவமாய் சுமந்த
பாசமைந்தன் அவனும் துப்பாக்கி
கரம் பற்றி களம் சென்று விட
களத்தின் நிலமை தனை பார்த்தும் - கேட்டும்
சுமக்கின்றான்
நாளை தன் மைந்தனின் நிலையினை

நாட்டின் துயரமதை
களைந்திட மண்ணின் மைந்தனவன்
சுமக்கின்றான் துப்பாக்கியை
ஏன்?
பவுன் போட்டு பட்டுடுத்தி
பக்குவமாய் பெற்றோர் துணையிருக்க
பவுனி வந்த மங்கையவளும்
இயக்குகின்றாள் ஆட்லெறியை

பள்ளிப்பருவமதில்
பக்குவமாய் படித்திட
எண்ணங்கொண்ட சின்ன நெஞ்சமதும்
சுமக்கின்றது பாசமின்றி
ஏன்? என்ற எண்ணம் உதிக்கின்றதா?

ஆம்!
கோட்டையிலிருந்து மூசி வந்த செல்
தனையனின் தந்தையை கொண்டு
சென்றது
சூரியக்கதிருடன் தாயவளும்
சென்றுவிட்டாள் தந்தையுடன்

யுத்தமேகம் சூழ்ந்த
இரத்தம் கசிந்த மண்ணில்
நித்தம் வாழ எண்ணாது
சுற்றம் சூழ எட்டி வாழ்வோம் - என்ற
எண்ணம் கொண்டே இடம் பெயர்ந்தவனும்
நித்தம் வேலையின்றி
சுமக்கின்றான் விறகுதனை

மணநாளை எண்ணியிருந்த
மங்கையவளும்
மஞ்சள் கயிறை கழுத்தில் போட்ட
மறுகணமே கழற்றிப்போடுகின்றாள்
மணவாளனின் மார்புதனில் - ஆம்
மறு நாளே சுமக்கின்றாள் தனிமையை

தன்னுடன் பிறப்பவள்
வாழ்க்கைக்காக
சீதனம் புரட்ட
விமானம் ஏறிய - தமிழ்
மகனின் ஏக்கம் தெரியுமா?
தாய் நாட்டின் தாய் மடியில்
நான் சேர்வது எப்போ - என்ற
ஏக்கச் சுமையுடன் காத்திருக்கின்றான்
கனடாவில்

து. நளாயினி
விடுகையாண்டு

# எங்கு போனாயோ?

நுரைப் பூக்கள் அள்ளி வந்து
கரை தீண்டிக் காணாமல் போன
ஆழி அலை போல - அவள்
மனந்தீண்டி விட்டு
மாயமாய் எங்கு போனாயோ?

ஆதவன் போகும் திசையெல்லாம்
திரும்பித் திரும்பியவன்
முகம் நோக்கும்
முகத்தை மறந்து
எங்குதான் போனாயோ?

அமுத மொழி பேசிப்பேசி
அவள் மீது
அன்பை அள்ளிப் பொழிந்து விட்டு
அவள் ஆண்டவனாய் மதித்தவனே!
அவளின் அழுத விழி பாராமல்
எங்குதான் போனாயோ?

அவள் பூங்கரங்கள் இரண்டும் - சுவாமிக்குப்
பூமாலை சாத்தி - நீ
வரவேண்டுமென்று
வரம் வேண்டி நிற்கிறதே?

சவால்களை எதிர்கொள்ளத்
தயாரான அவள் நெஞ்சம்
சப்பாணியாகிப்போச்சே!
சாதனைகள் படைக்க - அவள்
தூக்கிய கரங்கள்
பக்கவாத நோயாளிபோல்
முடங்கிப்போச்சே!

மொத்தத்தில் நீ கொடுத்த
துயரக் கூண்டிலே
சிறைப் பட்டுப்போன
சிட்டு அவள்
உன் உருவத்தரிசனம்
ஒன்றே போதுமே - அதுவே
அவளுக்கு விடுதலை

ஆனால்,
விடுதலைப்பிழம்பை
நெஞ்சகத்தே ஏந்தி
அஞ்சா நெஞ்சனாய்
சமத்துவத் தேட்டத்தை
அள்ளிவரச் சென்றவன் நீ...
சரித்திர நாயகனாய் இம்மண்ணுக்கு
வித்தாகிப் போனாயோ ? ? ?

செல்வி எஸ். வசந்தகுமாரி
விடுகையாண்டு

# எப்போ விடிவு வரும்

இராகம் - சண்முகப்பிரியா

பாடிப்பாடி ஆடுகிறேன் - என்
 பாட்டுக்கு ராகம் ஏதுமில்லை
வேட்டுக்கள் தினமும் கேட்கையிலே
 வெருண்டு நானும் ஓடுகிறேன்
என் பாட்டுக்கு எப்படி ராகம் வரும் ?
 என் நாட்டுக்கு எப்போ விடிவு வரும் ?

கண்ணை மூடிதூங்க ஆசை
 தாலாட்டில் வேணுமென் தாயின் ஓசை
மண்ணை அள்ளவே வந்தவன் பசிக்கு
 தாயே போனாள் வாயின் ருசிக்கு
என் பாட்டுக்கு எப்படி ராகம் வரும் ?
 என் நாட்டுக்கு எப்போ விடிவு வரும் ?

பாட்டில் நிறையச் சந்தங்கள் உண்டு
 பாவி எனக்கோ சொந்தங்கள் இல்லை
கூட்டில் வாழ்ந்தோம் குருவிகள் போலே
 க0ாட்டில் தவித்தோம் கண்ணீர் சொரிய
என் பாட்டுக்கு எப்படி ராகம் வரும் ?
 என் நாட்டுக்கு எப்போ விடிவு வரும் ?

மடிவு தானா?எங்களின் வாழ்வு
 விடிவு காணா தேசமா எமக்கு
துணிவு எல்லாம் மனங்களில் வந்தால்
 பணிய மாட்டோம் எவருக்கும் மண்ணில்
என் பாட்டுக்கு எப்படி ராகம் வரும் ?
 என் நாட்டுக்கு எப்போ விடிவு வரும் ?

சிறிஸ்கந்தராஜா - ஜெகதீஸ்வரி
விடுகையாண்டு

# தூறல்கள்

விடுதலை இருக்குமிடம்
வெகு தூரமில்லை !உன்
விழிகளிற்குள் தெரிகிறது
விடுதலை விருட்சம்..!

விழிகளெனும் சமுத்திரத்தில்
முத்தெடுக்க விழுந்தேன் !
சுழியினில் மிதந்தேன் !

விடுதலை தூறல்கள்
என் மேனி தனை
தழுவுவதற்காக
விழி பார்த்திருந்தேன் !

உந்தனதும் எந்தனதும்
இதய நந்தவனமதில்
இன்பமாய் பூத்துக்குலுங்கிய
எம்காதல் புஸ்பத்தை
பறித்து நசுக்கி விட்டு
வெவ்வேறு இடங்களில்
விருட்சமாக தவிக்கின்றன
நமதினிய உறவுகள் !
தென்றலே வந்துவிடு என்னோடு!

ஏனெனில்...
என் சுவாசம் உன்னோடு
விலங்குடைத்து - எனை
விடுதலை செய்!
விடுதலையாகி உன்
இதய நந்தவனத்தில்
இன்பமாய் பூத்துக்குலுங்க

வைரவநாதன்கோமிளா.
விடுகையாண்டு

# வறுமை..........????

இனறைய வசந்த வாழ்வு
வறுமையும் வாஞ்சையும் கொண்டு
வரும் துன்பம் போக்கும்
வலிமை கொண்டாலும்
எம்வாழ்வு பணம் என்ற
கூட்டுக்குள் வினாக்குறியே..........!???.

எளியோனுக்காய் வலிமை பிணைத்து
"சஞசீவி" பெயர்த்த அனுமனாய் - நான்
நிமிர்ந்து நின்றாலும்
கொட்டாவி விட்டு நிற்கும்
அப்பாவி சமுதாய போக்கில்
என்வாழ்வு வினாக்குறியே ..........???

எம் வியர்வையினை இரத்த பாலாக
குடித்திடும் எலிகளாய்
நடமாடும் ஏந்தியுழைக்கும் கூட்டத்தியே - உன்
மௌனங்களை மாழவைத்து
மனங்களை உறங்க விடாது
நெற்றி புடைக்க நெடு முழக்க மிடு
நெஞ்சம் நிமிர்ந்து
வினாவான? வாழ்வுக்கு விடை
காண.........

வினாக் குறியிட்டு உழைக்கவில்லை - நீ
தழைத்திடும் தாழ்நிலத்தில்
தன்மானம் இழந்திடாமல்-
நாளைய சமுதாய நீரோட்டத்தில்
சங்கமித்து விடு..........

S. சிறீரஞ்சனி
விடுகையாண்டு

# துயிலெழு

துயிலெழு .......... மானிடமே...!

விதைகள் விதைக்க மண்ணில்
விளைந்தது பிணங்கள் தான்
பண மூடை களுக்காய்
பிண வாடைகள் - இதுதான்
மானிட நிஜங்கள்......!

துயிலெழு..........!

கால மேகங்களை என் பேனா முனையில்
பொசுக்கி உனக்கு புது உதயம் தருவேன்
இதயத் தசை கிழித்து
உதிரத்தேன் கலந்து
பெருமூச்சில் சுடெட்டுழுத்த
மானிட வர்க்கமா - நீ

வழித்திரையாகி வழி மறைக்கும்
துளி நீர் உப்பிட்டு - இன்னும்
எத்தனை நாளைக்கு விருந்துவைப்பாய்?
இன்றாவது விடிய - உன்
கதிர்க்கரம் விரித்தெழு - மானுடம் தழைத்திட..!

உழைப்பை தான் பறிகொடுத்தாய்
உணர்வுகளை ஏன் தொலைத்தாய்
கொதித்து கொதித்து தணல்
குமுறிய போதெல்லாம்
சமாதானம் என்ற சமாளிப்பு
வார்த்தைக்குள் அழிந்தது போதும்
துயிலெழு............ மானிடமே..........!

அ.சசிகுமார்.
விடுகையாண்டு

# விடுதலை

கல்லறைச் சுவடுகளிற்குள்
கவிபாடி உறங்கி நிற்கும்
இனிதான உறவுகளே.......!
உங்களால் விட்டுச்செல்லப்பட்ட
விடுதலைத் தாகம்
தணியவில்லை இன்னும்.....!

முன்வினைப் பயனால்
முளைத்தோம் பூமிதனில்
முகிழாத பல இதயங்களின்
அன்பில் நனைந்தோம்.......!
வசந்த தென்றலாய் இன்பமும்
கடும்புயலாய் துன்பமும்
இணைந்திருக்கும் சோலை
வாழ்க்கையெனவே அறிந்தோம்...!
மண்ணில் பிறந்து
கண்ணீரில் நனைந்து
வாழ்வின் அர்த்தம் புரிந்தோம்.........!
கழுந்தனிலே நஞ்சேந்தி
உடலினிலே குண்டேந்தி
விடுதலைக்காக
விதையாகிப்போனவிருட்சங்களே
விழ விழ எழுந்திடும்
புண்ணிய புஸ்பங்களல்லவா
நீங்கள்.........!

விடுதலைக்காக
விதையானவர்களே
விடுதலை வெகுதுரமில்லை.....!
விடுதலை வேள்விதனில்
விதையாகிப்போனோரே
விடுதலைக் கவி
இசைக்கப்படும் போதினிலே
உம் நாமம் அதிலே கலந்திருக்கும்......!

ம.ஜெயவதனன்.
விடுகையாண்டு.

# விடியலுக்கான கனவுகள்

தூக்கம் தழுவும் இரவுகளிலும்
துயில மறுக்கிறது இதயம்
ஏக்கம் ததும்பிய முகங்களில்
அமைதி வரும் எப்படி ?

எம்மை பொசுக்கிய
யுத்தநெருப்பதை உருமாற்றி
நோயுற்று வீடற்றவர்களாக
ஓடி ஓடி களைத்து
ஒழுகும் வானத்தின்கீழ்
ஒதுங்கிய வாழ்வு - இன்னும்
ஒலிக்கிறது வேதனை ஓலமாக
சிட்டுகுருவியின் சிறகடிப்பையும்
மொட்டுவிரித்த பூச்செடியையும்
மோகனத் தவத்துள் மூழ்கிய
நிலாக்கால இரவையும்
இரசிக்க முடியாதவர்களாயுள்ளோம

எப்போது எது நேருமென்றறியவியலாத
திகழ் கதையாய் இந்த எம்வாழ்வு
எதுவரினும் கொந்தளிப்பை
ஆழத்துள் முடக்கிவிட்டு
கவனமற்றிருப்போம்
சடுதியான விடுதலைக்காக!
மடுவிற்குள் நின்றபோதிலும்
மலையுச்சியே எம் கனவு
நிச்சயம் சிகரமடைவோம்
கனவுகளை அடைகாத்து
இறகுகள் பராமரித்து
இரவுகளின் அலைக்கழிப்பை
கலைப்போம் ...........
என்றோ ஓர் நாள்
எமக்காக விடியத்தான்
போகிறது எம் வானம்

K. குமார்
விடுகையாண்டு

# "பூஜ்யம்"

யாரிவள் .............?
பேனா என்கின்ற
பேராயுதம் கொண்டு - அடுத்தவர்க்காய்
மௌன யுத்தம் செய்தவள்.

அவளின் ............
வளைக்கரம் வரைந்திடும் இலக்கியத்தில்
வழிந்திடுமே இன்ப சுகம்.

அவளின்.......
வார்த்தைகளுக்கு மட்டுமா......?
வாழ்க்கைக்கும் தான்
வரைவிலக்கணம் போட்டவள்.

அந்த.......
நெஞ்சகம் தான் என்னே......!
இனிய கவிதை இலக்கியம்

இருந்தும்........
சீதனக் கூண்டினுள்ளே
சிறைப்பட்ட சீதை அவள்.

இதைத்தான்........
சிந்திக்கத் தெரிந்தும் இந்த
சீர் கெட்ட சமுதாயம்

வஞ்சித்ததே........!
வார்த்தைகளால் - அவளுக்கு
மனம் போல வாழ்வு என்று

இதனால்........
உறவுகளைக் கொழுத்தியது - அவளை
கல்யாணம் செய்து வைக்கும் வெறி
கழுத்தை நீட்டியவள் கல்யாணி ஆனாளே!

நங்கையவள்......
நாளும் பொழுதும் கட்டிய
இலக்கியக் கோட்டையும் இடிந்திட
அகதிச் சிலந்தி ஆனாளே!

அங்கே.......
அடியுதை சித்திரவதைகளாலே
உடலமொடு திறமையதும்
சிதைத்து எறியப்பட்டு
பூவையவள் பூச்சியமாய்ப் போனாளே!

வி. பன்னீர்ச்செல்வம்
விடுகையாண்டு

# கேள்விக்குறி

இரும்புக் கம்பிகளில் - எங்கள்
இரண்டு கைகளும்
விலங்கு மாட்டிய பின்
விதவைகளாய் எங்கள் வாழ்வு!

போர்ச்சுழலில் போட்ட
ஷெல்களில் கை கால் இழந்து
சொந்தங்கள் இழந்து
சோகங்கள் உருவான போது
எங்கள் இதயங்கள்?..........

பள்ளிக்கு செல்லும் பறவைகளாய்
சின்னஞ் சிறுமிகளாய் பட்டுவெண்மையில்
பவனிவந்த மங்கையர்கள்
பூவிழந்து பொட்டிழந்து
முகந்தனில் களையிழந்து......?

பாதைதனில் நடமாட பயந்து
ஒழிந்து ஓடி பரிதவித்து
பாரம் கொண்ட உடலை
பாதுகாக்க எண்ணிய
பரிதவிப்பான நாட்களுள்
இன்னும் எங்களிற்கு எத்தனையோ.......?

எண்ணிப்பார்க்கிறேன்!
ம்.........என்ன வென்பது
வாழ்வின் படிகள் எல்லாம்
வார்த்தைகள் இன்றி போன போது
வாழ்வதும் கேள்விக்குறிதானோ?...........

சி.சிவகௌரி.
விடுகையாண்டு.


# ஊனம்

மானுடமே மரணித்து விட்டாயா?
எங்கு சென்றுனைத் தேடுவது?
நீ மௌனமாக இருப்பதால்
நிலைத் திருக்கும் சமாதானமும்
நீங்கிப் போய் விடுமோ - என்று
அச்சம் என்னை வாட்டுகிறதே!

காற்றாயிருந்தால் உன்னைச் சுத்திகரிப்பேன்
வெயிலானால் உன்னைப் பொசுக்கியிருப்பேன்
மழையினால் உன்னைக் கழுவியிருப்பேன்
மானுடமே! நீ வாழ்வதற்காக

பணம் பதவி பட்டம் உயர
குணமும் மானமும் புதைக்கப்பட்டிருக்கிறதே
மானுடமே நீயும் பிணமாகி விட்டாயா?
இல்லையேல் வேடிக்கை பார்க்கிறாயா?

உன்னைத் தேடும் உள்ளங்களை
உற்று தான் பார்க்காயோ
ஊனம் உற்று உறங்காது
வெளிப் பட்டு நில்



வே. ஜெயந்தினி
இரண்டாம் வருடம்


# வேற்றுமை

இரத்த சாயம் பூசப்பட்ட பழைய வீடு
பொய்களையும் போலிகளையும் வேலிகளாக்கி
சகோதரத்துவத்தை உரமாகப் புதைத்து!
வேற்றுமை என்னும் நச்சுச் செடிகளை
வீட்டுக்குப் பின்புறத்தே தோட்டமாகக் கொண்டுள்ளது!

இதற்கு!
மதம் ஒரு வாசல்
மொழி ஒரு வாசல்
சாதி இன்னுமொரு வாசல்

இத்தனையும் தாண்டி உள் நுழைந்தால்
பூனை படுத்தெழும் அடுக்களைச் சாம்பல்

மானுடத்தின் முடிவோ சாம்பல்!
அதனால் தானோ? என்னவோ?
மனிதம் எரித்து - எஞ்சும்
மானுடத்தை சிவன் தன்
யாக்கையில் பூசிக் கொள்கின்றார்!



செல்வி ச. தனுசியா
விடுகையாண்டு

# விழுதுகள்

மகனே மன்னிப்பாயா?
உனக்காக உன் அம்மா
ஒரு முறை அழுது விட்டேன்
அதற்காக மன்னிப்பாயா?

பத்தாம் திங்களின்
பாலூட்டச் சுமந்த
என் கரங்கள்
பதினெட்டாம் வருடமதில்
உன் வித்துடலைச்
சுமக்கிறதே!

பாலாக ஊட்டிய
என் செங்குருதியோ
விடுதலைக்காய்
செந்தமிழ் தேசத்தில்
தேங்கிக்கிடக்குதடா மகனே!

அழுகிறேன் உன்னை
இழந்ததற்காக அல்ல
பாதியிலே பணியை முடித்து
விட்டோமே என
நீ அழுவாய் என்பதற்காக
அழுகின்றேன்.

கலங்காதே,
விட்டுச் சென்ற விடுதலைப்
பணியை வென்று
விரைவில்
நீ உறங்கும் கல்லறையருகே
உன் கடைசித்தம்பியும்
நிச்சயம் உறங்குவான்.



சம்பூர் பொன் உதயகுமார்
விடுகையாண்டு.

# மாண்பு

இராக்கால வழிப்போக்கனுக்காய்
இரவியாய் தவமிருந்து
இருளகற்றும் தெரு விளக்குகளுக்கு
தெரியும்.....
தெளிவில்லா மானுடம்
தன்னை கல்லால் அடிக்குமென்று!

தன்னைக் காப்பாற்றிக்கொள்ள
பாலங்களின் கீழ்
தலைகீழாய் தொங்கும் வௌவால்களுக்கு
தெரியும்....
தலைக்கணம் கொண்ட மானுடம்
தன்னையும் கல்லால் அடிக்குமென்று!

தெருவோர ஆலமர நிழலில்
நிம்மதியாய் உறங்கும்
தெரு நாய்களுக்கும்
தெரியும்.....
திருந்தாத மானுடம்
தன்னையும் கல்லால் அடிக்கும் என்று!

விண்ணிலே களங்கமின்றித் தவழும்
விண்ணுலக விண்மீன்களுக்கும்
விண்ணுலக வெண்ணிலவுக்கும்
தெரியாது.......
கண்கெட்ட மானுடம்
தன்னையும் கறைபடியவைக்கும் என்று!

இறுதியாய் ஒன்றே ஒன்று மட்டும்
மானித மானிடமே ஏய் மானுடமே
உன்னதமான மானுட உயிர்களை
உதறாதே.......
தூக்கி எறியாதே, மிதிக்காதே ஏனென்றால்
நீயும் என்றோ ஒரு நாள் மிதிக்கப்படுவாய்!

செல்வி அமிர்தலிங்கம் பிரியதர்சினி
ஆரம்பக்கல்வி

# புரிதல்

* சற்று நேரத்திற்குள்ளும்
விட்டு விடுதலையாகியே
சுற்றிப்பறந்து களிக்கும்
சுதந்திரப்பறவையான நெஞ்சே!
சற்று நின்று;
கேளாய்!

* எட்ட எட்ட
எழுந்து பறந்தாலும் - நீயும்
சுருண்டு கிடப்பது
ஒரு வட்டத்திற்குள்ளேதான்
என்பதை
தெட்டத்தெளிவாய்
நிரூபித்து நிற்கிறாயே!
எப்படி என்று பார்!

* பொருளில்லா ஏழையரெல்லாம் - வெறும்
பூச்சியம் தானே!
என்று,
பறை கொட்டி நிற்கிறாயே!
கல்யாணக் கோயிலை
மீன் சந்தை ஆக்கி

* பூச்சியம் என்றதொரு
வட்டம் தான்
நூற்றைப் பத்தாயும்
பத்தை நூற்றாயும்
ஏற்றி இறக்கிடும் சக்தியை - தன்னுள்ளே
தேக்கி வைத்திருக்கும்
என்று உணர்ந்திடுவாய்

* உன்னைச் சுற்றி
வளைந்து கிடக்கும் வட்டத்தை விட்டு
எட்டிப் பார்!
உண்மை புரியும்
பூச்சியத்திற்குள்ளே உந்தன்
ஆட்சி யெல்லாம்
பூச்சியம்தான் என்பதை
உணர்ந்து கொள்.

**திரு. என். வில்வம்**
இரண்டாம் வருடம்

# சுமை!

மனதிலே பாரத்தோடு
மலையேறிய சுமையுடன்
மலைத்துப்போய் நிற்கிறாய் - ஏன்
மரணித்து விட்டாயோ......?

வாழ்விற்கு விதையிட்டு விருட்சமாய்
வளர்ந்தவள் நீ.....
வாழ்வினை தொடக்கி விட்டு
வயிற்றினை நிரப்பிக் கொள்ள
குடும்பம் என்ற குவலயத்துள் - உன் வாழ்வை
நொண்டியாய் முடக்கிடாதே...........

அல்லும் பகலுமாய் சுமை கொண்ட நினைவோடு
அரை உறக்கமின்றி
துட்டுப்பணம் பெற்று - தம்
துயர் துடைக்க வேண்டுமென்று
எட்டி நின்று கொழுந்தெடுத்து
இறக்கி வரும் சுமையில்
பெற்ற சுமை மறந்து
பெருமிதம் கொள்கிறாயே......

விட்டதா விடியல்!
பனிமழை நனைத்திட
மீண்டும் சுமக்கின்றாய் உன் சுமையை
ஏக்கப்பெருமூச்சுக்களாய் - உன் நினைவு.
எம்முடன் தொடரும் ஏழ்மை கண்டு
யார் வருவார் சுமை சுமக்க - என்று
நடக்கிறாய்.

மலையேறும் நினைவுடன்
மனதினிலே சுமையோடு....!

ச. இராஜேஸ்வரி
விடுகையாண்டு

# விழித்துக்கொள்

ஓ மானிடமே!
சற்றே என்னை
ஓய் வெடுக்க விடு
நீங்கள் போட்ட
சத்தத்தால் - என்
நித்திரை தொலைந்து விட்டது
சற்று என்னை ஓய்வெடுப்பதற்கு
விட்டு விடு மானிடமே!......

இரத்தமும் சதையும் ...........
ஓ.... அலுத்து விட்டது
எங்கும் யுத்தம் ....!
தொலைந்து விட்டது - என்
நிம்மதி மறைந்து விட்டது.
மானிடமே விழித்துக்கொள் - இவ்
வையகத்தில் வாழ்வதற்கு.

ஓ... துப்பாக்கி வேட்டுக்களும்
துணிகர கொலைகளும்,
பீரங்கி வெடிகளும்,
ஆடலொறி தாக்குதலும்,
கடத்தல் கெடு பிடியும்
கேட்டும் பார்த்தும்
அலுத்து விட்டது.
இந்த நிலை மாற வேண்டும்
மானிடமே விழித்துக்கொள் - இவ்
வையகத்தில் வாழ்வதற்கு!

மானிடனே!
நித்தம் நீ எனக்கு
இரத்தம் படைப்பதும்
நான் அதை ருசிப்பதும்
ரொம்ப மகிழ்ச்சிதான் - இருந்தும்
சற்று நான் ஓய்வெடுப்பதற்கு
மானிடனே விழித்துக் கொள்
மானிடனே விழித்துக் கொள்..

சீ. நாகராஜா
விடுகையாண்டு

# விழித்துப்பார்.........



மானிடம் மரணித்துவிட்டது
ஊதுபத்தியாய்
மணம் பரப்பும் மனிதநேயம்
மரத்துப்போன மெழுகுவர்த்தியாய்
அழுகின்றது.

கல்லுக்குள் ஈரமுண்டு
உடைத்துப்பார்
விடைதெரியும்
வெட்டி வீழ்த்தும்
வீரனுக்கு ஈகமுண்டு
வளைந்து கொடுப்பான்
வாளைப்போன்று

முறுக்கேறிய மூர்க்கனுக்கு
ஆதிக்க வெறியுண்டு
சாதிக்க வேண்டும் என்ற
சமுதாய வேட்கையுண்டு
உடலுக்காய் உழைத்தவன்
உயிருக்காய் அஞ்சி

திரு. மயில். தவராஜா
விடுகையாண்டு

# சுமை

ஏன் குழந்தாய்
ஏன் அழுகிறாய் - உன்
சின்ன விழிகளுக்குள்
சோகத்தை ஏன் சிறைப்பிடித்து வைத்துள்ளாய்

ஏன்
முரசினைப் பிரித்து
முளைத்த முத்துப்பற்கள்
வெளியே தெரியாது
உன்.......
புன்னகையை
இறுகப்பூட்டி வைத்துள்ளாய்
உன்
சிறிய உதடுகளூடாக
துயரத்தை எப்படி - உன்
தொண்டைக்குள் திணித்தார்கள்


கொட்டும் மழையிலும்
கொடிய வெய்யிலும்
கொடூரமான பனியிலும் - உன்
பெற்றோர் மாய்ந்துழைத்த
சொற்ப பணம் - உன்
பள்ளிப் படிப்புக்கு போதாது என்றா?
மழலையே கண் கலங்குகிறாய்

உன்
பட்டு கன்னங்களில்
ஒட்டி கொண்டிருக்கும்
கண்ணீர் தழும்பை
தட்டிவிட்டு - புறப்படு

கண்ணே..!
நீ கற்றிட கல்விச்சாலைகள் இங்குண்டு
அழகான பாடப்புத்தகம் - உன்
கரங்களில் கிடைக்கும்
அன்பான அரவணைப்புடன்
பெற்றிடுவாய் உயர்வான கல்வியை

உன்
பெற்றோரின் துன்பச்சுமையை - ஆம்
கூடைச்சுமையை கீழிறக்க
புறப்படு...!

கூடை போட்டு மலைக்கல்ல
கல்வி உபகரணங்களை சுமந்து
பள்ளிக்கு ஆம் பள்ளிக்கு...
நாளை உலகின் நாயகனாய் - எம்
நாட்டில் நல்ல மனிதனாக - நீ
வாழப்பிறந்தவனே இறக்கிடுவாய் - உன்
துன்பச்சுமையை - சுமந்திடுவாய்
உயர்வான எண்ணமதை



செல்வரஞ்சினி செல்வநாதன்
[redacted] விடுகையாண்டு.

# மானுட நேயம் எங்கே...?

வானைத்தொடும் மலைகள்
இங்கு
வாழ்வை எட்டுமா.....!
மானுடம் .......
மானுட நேயங்கள்
மழுங்கடிக்கப்பட்டு - அரை
அடிமைகளாக நாதியற்று
வாழ்கின்றனர் - இந்த
கேடு கெட்ட சமுதாயத்தில்
நாட்டை வளம் படுத்திய
இம்மக்கள்
சொந்த முகவரியற்ற மனிதர்கள்
இந்த
நவீன யுகத்தில்!.

இவர்களின் உழைப்பால் - நாடு
மட்டுமா! முன்னேறுகிறது
இல்லை...... இல்லை
பல பேர்கள்
பேரம் பேசி முன்னேறுகிறார்கள்.

சில பேர்களுக்கு
ஐந்து வருடத்தினுள் மூன்று
திருவிழாக்கள் வரும்
அப்போது அவர்கள்
இவர்களின் காலைப்பிடிப்பார்கள்
அவர்களுள் சிலர்
சாதிப் பெயரைச்சொல்லி
சமத்துவமா கதைப்பார்கள்
இனத்தின் பெயரைச்சொல்லி
இழிவா(ய்) கத்துவார்கள்
ஆசனத்தில் அமர்ந்தபின்
எட்டி உதைப்பார்கள்
எட்டியாந்தோட்டைக்கு
பாவம்................
ஏமாளிகள் இம்மக்கள்
ஏப்பம் போடுபவர்களுக்கு!

நாட்டை உயர்த்துவது
இவர்கள் பணியாம்
ஆனால்.....................

கொலைவெறிப்படைகளின்
குண்டுகளுக்கு இரையாவது
இவர்களின் சாப கேடாம்.....
முல்லோயாவில் ஆரம்பித்த
இந்த கொலை வெறி
இன்று.................
கந்தப்பளையாம்
ஜெயராம் நிமலானந்தன்
உயிருக்கு..............
உலை வைத்த குண்டுகளை
வளர விடலாமா.........?
இல்லையெனில்
இங்கிரியாவோடு நிறுத்து

இங்கே படித்தவர்கள்
பண்பு கெட்டு
அலைந்தால்..........
ஏற்படுமா மாற்றம்
பதவி சுகத்திற்காக
வாலைப்பிடிக்க மட்டும்
தெரிந்துவிட்ட வாத்திக்கு
கோவணம் அவிழ்ந்தாலும்
மானம்.................அது
போகவில்லையாம்.

மலையகம் விழித்தெழ
வேண்டுமாம் இளைஞர்
அணி.........இல்லையெனில்
என்ன செய்வது.........
மானுட நேயம் மழுங்கடிக்கப்பட்ட
மக்கள் இவர்கள்..................

**எல். நவரட்ணம்.**
**விடுகையாண்டு.**

# புத்துலகு

சிந்தனைச் சிறகுதைத்து
எழுந்து நின்று
சுற்றும் புவியைச்
சுருக்கி வைத்து
வேதனை சுமந்து
சாதனை படைக்கும் - இந்த
விவேக யுகத்தினிலே
மனிதமே நீ எங்கே ?

அடுத்தவர் வாழ்வினிலே
வேதனைத் தீமூட்டி
குளிர் காய்ந்து சிரித்தெழும்
வேதாள தேசத்திலே
வெள்ளாடுகள் விரட்டப்படுகின்றன
குள்ள நரிக் கூட்டங்களுக்கு
சல்லாப உறவுகள் நீட்டப்படுகின்றதே !
மனிதமே ! நீ எங்கே ?

தர்மத்தின் சிறகுகள்
ஒடிக்கப்படுகின்றன
அதர்மத்தின்
சிறகுகள் வருடப்படுகின்றன
அன்பு வஞ்சிக்கப்படுகின்றது
அடக்கு முறை ஆராதிக்கப்படுகின்றதே..!
மனிதமே ! நீ எங்கே ?

சாக்கடை வாடையுள்
அமிழ்ந்து போன
சந்தன வாசமாய் மாக்களின்
கொடுமை கோசத்துள்ளே
மருவி ஒழிந்து கிடக்கும் மனிதமே !
நீ........................வெளிப்பட்டுவா..!

கோபத் தூசியாலும்
கொடுமைக் கறையாலும்
பிரிவினைக் குழப்பமாலும்
பரிணமித்து கிடக்கும் பூமியை
சலவை செய்தெடுக்க வா! வா!

அல்லவை எல்லாம் நீங்கி
அன்பினோடு பெருங்கருணை
மாண்பு மிக்க தியாகம் என்று
நல்லவை சுமந்து
நீயும் பூபாளம் பாடிவா !
புலரட்டும் புத்துலகு.

**செல்வி எஸ்.வசந்தகுமாரி.**
இரண்டாம் வருடம்

# விழிதிறந்து பாரீர்......

போர்க்கால மேகமாய்
போய்மடிந்த உறவுகளே!
உம்மோடு உறவாட
இனிதான விருப்பங்கள்
என் நெஞ்சில் கருக்கட்டும்
ஊர் உறங்க வேண்டுமென
இரவினிலே விழித்திருந்தீர்
நடுச்சாம நிசப்த்தங்களை
நண்பனாக்கிக் கொண்டீர்!
கண்களிற்குள் உறக்கம்
கை கொட்டிச்சிரித்தபோதும்
காவல் நம் கடமையென
களிப்புடனே கண் விழித்தீர்
தரணியிலே தாய் மண் வழிக்காக
சிந்திய குரதியின் ஈரம்
காய்ந்து விடவில்லை - எம்
நெஞ்சங்களிளே
உயிர்ப்புடனே உறவாடுது.
உன்னதமானவர்களே!
விழிப்பெமக்கு தருவதற்காக
விழி மூடிச் சென்றீரோ?
விதையாகி போனீரோ?
விழித்து விட்டோம் நாமே
விழிதிறந்து பாரீர்.



ந. லிங்கேஸ்வரன்
விடுகையாண்டு

# விடுதலை

பெண்ணே ?
கொஞ்சம்
விழித்துக் கொள்
உனக்கும் - விடுதலை
காத்திருக்கு

பெண்ணே ?
மௌனமாய் - வீட்டுக்குள்
முடங்கி கிடந்தது - போதுமினி
கொஞ்சம் விழித்துக்கொள்
வெகு விரைவில் - உனக்கும்
விடுதலை காத்திருக்கு.

பெண்ணே ?
முடிந்து விட்ட
உந்தன் நேற்றைய வாழ்வில்
நிகழ்ந்தது - போதும்
நாளைய வாழ்வு
நலமாய் அமைய
கொஞ்சம் விழித்துக்கொள் - உனக்கும்
விடுதலை காத்திருக்கு

பெண்ணே ?
உனக்கும் -வாழ்வில்
வசந்தங்கள் உண்டு
வாழ்வினில் - நீயும்
விழித்துக்கொள்
விடுதலை உனக்காய்
பார்த்திருக்கு..........!
விடுதலை உனக்காய்
காத்திருக்கு.........!



ம.லலிதா.
விடுகையாண்டு.

# ஏ!.. அதிசயப் பிறவியே!

உனது கால்கள் ஏன் இத்தனை
தூரம் நீளமாக இருக்கிறது?
"என்னை யாரும் எளிதில் பிடிக்க
முடியாமல் நான் அசுர கதியில்
ஓடித்தப்புவதற்கு"

உனது முன் தலை
ஏன் வழுக்கையாக இருக்கிறது?
"என்னை யாரும் எளிதில் பற்றிப்
பிடிக்காமல் இருப்பதற்காக"

உனது பிடரியில் இருந்து
ஏன் சடாமுடி தொங்கிக்கொண்டிருக்கின்றது?
"ஒருவன் ஒரு முறை என்னை
பற்றிப் பிடித்தால் அவனிடமிருந்து
நான் தப்பாமல் இருப்பதற்காக"

நீ ஏன் இத்தனை பெரிய சிறகுடன்
காட்சியளிக்கின்றாய்?
"நான் ஒரு முறை தென்பட்டும்
என்னை உதாசீனம் செய்பவர்களிடமிருந்து
நான் காத தூரம் பறந்து செல்வதற்காக"

அது சரி, சரி நீ யார்?
"நானே சந்தர்ப்பம்"



குறிப்பு:- சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதிலேயே வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது.

T.S. டேவிட்
விடுகையாண்டு

# என்று தணியும் ......!




முட்கம்பி வேலிக்குள்
முடங்கிக் கிடந்தோம்
விடுபட என்னி
விடை தேடினோம்
சுருள் கம்பி எமக்கு
சுற்று மதிலானது
காவல் அரண் எம்மைக்
கட்டியணைத்தது
மண்மூடை எமக்கு
மண் போட வைத்தது

விட்டில் பூச்சிகளாய்
விளக்கை மட்டும்
வட்டமிடும்
வந்தேறுகள் நாமல்ல
வட்டத்துக்குள்ளும்
விட்டம் வரைந்து
வரலாறு வடித்தவர்கள்


அதற்காக,
கொடுத்த விலை கொஞ்சமல்ல
தமிழன்னை தவித்தது
தாய்மண் துடித்தது
நாடிழந்து நாதிகளாய்
வீடிழந்து வீதிகளில
ஊரிழந்த உறவுகளாய்
உணர்வுகளை ஊனமாக்கினோம்


புழுதியிலும் சகதியிலும்
புரண்டு, புரண்டு
அகதி எனும் அந்தஸ்துடன்
சுதந்திரம் நோக்கிய
சுதெசிகளாய்!
சிலுவை
சுமக்கின்றோம்.

திருமதி. ஆனந்தராஜன்
விடுகையாண்டு




-நிமலதாஷன்-



Art by



திரு.பீ. சிவகுமார்
விடுகையாண்டு



செல்வி. பி.ஏஞ்சல்
விடுகையாண்டு



திரு. எஸ்.கங்காதரன்
விடுகையாண்டு



செல்வி. எஸ். செவ்வந்தி
விடுகையாண்டு



செல்வி. த. தனுசியா
விடுகையாண்டு



ந. சிவகுமார்
விடுகையாண்டு



செல்வி. ஜே. ஹனிதா
விடுகையாண்டு




திரு.வ.ஆனந்தராஜா
விடுகையாண்டு



திரு. ஆ. நவனீகன்
விடுகையாண்டு



செல்வி. பூ. சுடர்மதி
விடுகையாண்டு



திரு. ஆர். ரவீந்திரன்
விடுகையாண்டு



து. சிவசங்கர்
விடுகையாண்டு



சி. கிருபாகரன்
விடுகையாண்டு




செல்வி. க. சந்திரா
விடுகையாண்டு



செல்வி. கே. வனஜா
விடுகையாண்டு

# முத்தமிழ் கலா மன்ற உறுப்பினர்கள்

காப்பாளர்கள் :- திரு. எஸ். ஜெயக்குமார் (முதல்வர்)
திரு. பீ. ஸ்ரீதரன் (பிரதி முதல்வர்)
திரு. எஸ். இதயராஜா (உபமுதல்வர்)

பொறுப்பு விரிவுரையாளர் :- திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி

தலைவர் :- திரு. கே. நிமலதாசன்
செயலாளர் :- செல்வி. எஸ். கல்யாணி
பொருளாளர் :- திரு. என். லிங்கேஸ்வரன்
பத்திராதிபர் :- திரு. பீ. பரமேஸ்வரன்

உபதலைவி :- திருமதி. என். புஷ்பசாந்தி
உபசெயலாளர் திரு. ஏ. ஸ்ரீதயா

செல்வி. ஜீ. வனஜா
செல்வி. எஸ். வத்சலா
செல்வி. பீ. சுடர்மதி
செல்வி. என். சாந்தகௌரி
செல்வி. ரி. நளாயினி
செல்வி. கே. பொன்னரும்பு
செல்வி. ஆர். ஜெயந்தி
திருமதி. ரி. கல்யாணி
திருமதி. ஏ. கவிதா
திரு. எஸ். கிருபாகரன்
திருமதி. பீ. ஜீவராணி
திருமதி. ரி. ஜீவடலர்
திரு. எஸ். நாகராஜா
திரு. பீ. கோணேஸ்வரராஜா
திரு. ஏ. ரவிச்சந்திரன்
திரு. எம். கிருபைரட்ணம்
செல்வி. எஸ். சிவகௌரி
திருமதி. ஜே. கேசவப்போடி
திரு. ஏ. நதனீதன்
செல்வி. எஸ. வத்நலா
செல்வி. எஸ். செவ்வந்தி
செல்வி. கே. மல்லிகா
செல்வி. எஸ். ஏ. பிரியதர்சினி
செல்வி. எஸ். ஜெகதீஸ்வரி
செல்வி. எஸ். வசந்தகுமாரி
திருமதி. ரி. குமுதா
செல்வி. எம். லலிதா
திருமதி. எம். ராஜேஸ்வரி
திருமதி. எஸ். சிவஞானவல்லி
திருமதி. எஸ். நவாஸ்கரன்
திரு. பீ. உதயகுமார்
திரு. வீ. திருநாவுக்கரசு
திரு. தி. கே. இளங்கோ
செல்வி. வீ. கோமிளா
திரு. எஸ். கதிரமலைநாதன்
திருமதி. எம். அந்தனிராஜ்
திரு. எஸ். ஸ்ரீதரன்

# நன்றி நவிலல்



அன்புடன் எமது அழைப்பை ஏற்று விழாவுக்கு வருகை தந்த பிரதம அதிதி அவர்களுக்கும்,

ஆதரவு தந்து எம் முத்தமிழ் விழா மேடையேறவும், 'தேட்டம்' மலரவும் வழிசமைத்த கல்லூரி முதல்வர், பிரதி முதல்வர், உபமுதல்வர் ஆகியோருக்கும்,

இனிய முகத்துடன், எம்விழா சிறக்கவும், ஊக்கமும் அளித்த எமது மன்றத்தின் பொறுப்பு விரிவுரையாளர் திருமதி. சந்திரலேகா கிங்ஸ்லி அவர்களுக்கும் ஏனைய விரிவுரையாளர்களுக்கும்,

ஈகைக் குணத்திலே எமக்கு யாரும் நிகரில்லை என்ற விதத்தில் எமக்கு நிதியுதவியுடன், உழைப்பையும் உதவியாகத் தந்திட்ட ஆசிரிய அன்புள்ளங்களுக்கும்,

உவகை பொங்கிட உரிமையுடன் இவ்விழாவிற்கு ஒத்தாசை வழங்கிய கல்வி சாரா ஊழியர்களுக்கும்,

'ஊக்கமது கைவிடேல்' என்பதற்கிணங்க தோளோடு தோள் கொடுத்துதவிய மன்ற உறுப்பினர்களுக்கும்,

எத்தனையோ நாளாக கண்ட கனவு நனவாக அனைவரும் போற்றும் வகையில் நிகழ்ச்சிகளை வழங்கிய ஆசிரிய கலைஞர்களுக்கும்,

ஏற்றம் பெற்றிடவும் 'தேட்டம்' என்று நாட்டம் கொண்டு நல்லாசிகளும், ஓவியங்களும் தந்துதவிய அன்புள்ளங்களுக்கும்,

ஐயமின்றி அந்தி மாலைப் பொழுதினிலும் விழா சிறக்க ஒத்துழைப்பு நல்கிய நல் உள்ளங்களுக்கும்,

ஒப்பற்ற 'தேட்டம்' இதழை குறகிய காலத்தில் கலைநயங் கமழ அச்சேற்றித் தந்திட்ட நியு ஹில்பிரைன் அச்சகத்தாருக்கும்,

ஓயாமல் மேடையிலே ஒலி, ஒளி அமைத்தோருக்கும்,

ஔவையின் 'ஒழுக்கம் பேண்' என்ற சொற்படி ஒழுகி நின்று விழா வெற்றி பெற உதவிய கல்லூரி நண்பர்கள் அனைவருக்கும் எனது உளம் பூத்த நன்றி மலர்களை காணிக்கையாக்குகின்றேன்.

நன்றி



செல்வி. எஸ். கல்யாணி



அச்சுப் பதிப்பு
நியூ ஹில்பிரைன் ஓப்செட்
மல்லியப்பு, ஹட்டன்
0777 519159